Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 28 (13-09-1993) திங்கட்கிழமை ஓசை 207

## ஆசிய - பசுபிக் பகுதியில் புகைப்போர் தொகை அதிகரிப்பு

ஆசிய - பசுபிக் பகுதிகளில் புகைபிடிப்போர் தொகை அதிகரித்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. புகைபிடிப்பதனால் உருவாகும் தீமைகளை உணராதிருத்தல், சனத்தொகைப் பெருக்கம், சம்பள அதிகரிப்பு ஆகிய காரணமாக இங்கு புகைபிடிப்போர் தொகை அதிகரிக்கின்றது எனவும் தெரிவித்துள்ளது. இதேசமயத்தில் சிங்கப்பூரில் புகைத்தலை தடைசெய்யும் நோக்குடன் கடும் நடவடிக்கைகளை அந்நாட்டு அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. புகையிலை விற்பவருக்கு அபராதமாக 10 ஆயிரம் சிங்கப்பூர் டொலரும், புகைத்தலில் ஈடுபடும் 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு 50 சிங்கப்பூர் டொலரும், தண்டப்பணமாக அறவிடப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [17]

# வடக்கை ராணுவம் தாக்கினால் கொழும்பை புலிகள் தாக்குவர்!

## பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் பாரிய தாக்குதல் நடவடிக்கையில் இராணுவம் இறங்குமேயானால், விடுதலைப் புலிகள் கொழும்பைத் தாக்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புவதாக பிரபல சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் அச் செய்தியில் இதற்கென விடுதலைப் புலிகளின் குழு ஒன்று கொழும்பு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தகவல் பற்றிச்செய்தி வெளியிட்டுள்ள 'லங்கா தீப' பத்திரிகையானது, ஆயுதப் படையினரால், வடக்கு, கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு திட்டமிட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது. இத் தாக்குதல் திட்டம் மேற்கொள்ளப்பட்டால் அதனைத் திசை திருப்புவதற்காக விடுதலைப் புலிகள் கொழும்பு நகரிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் தாக்குதல் நடத்தலாமெனசிறிலங்காபுலனாய்விற்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் அச் செய்தியில் விடுதலைபுலிகளின் முக்கிய உறுப்பினர் கொண்ட குழு ஒன்று கொழும்பிற்குள் ஊடுருவி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து கொழும்பு நகரத்திலும், புறநகர்ப் பகுதியிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. வாகனங்கள் மீதான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இராணுவத்தின் நடமாட்டம் வீதிகளில் அதிகரித்துள்ளதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

இதே வேளை, இத் தாக்குதலைத் தடுக்கும் பொருட்டு பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பல்கலையில் கைப்பணிக்கலை பட்டதாரி பயிற்சிநெறி

(கொழும்பு)

மொறட்டுவப் பல்கலைக்கழகம் புடவைகள் கைப்பணிக்கலை தொழில்நுட்பப் பட்டதாரிப் பயிற்சிநெறியொன்றை முதற்தடவையாக ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

மேற்படி பட்டதாரிப் பயிற்சி நெறி மூலம் கைப்பணிக்கலை தொடர்பான தொழில்நுட்பத்தை அறிந்துகொள்ள முடியும்.

தைக்கப்பட்ட ஆடைகள் தொடர்பான தொழில்நுட்பத்தில் பொறியியலாளர்களைப் பெற்றுக்கொள்வது இப்பயிற்சி நெறியின் பிரதான நோக்கமாகும். மேற்படி பட்டதாரிப் பயிற்சி நெறியைப் பின்பற்றும் முதலாவது குழுவினர் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறுவார்கள், முதலாவது தொகுதியில் சுமார் 14 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறக்கூடிய ஆகக்குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 1992/93 கல்வியாண்டிற்கான பல்கலை. அனுமதி வெட்டுப்புள்ளி அடுத்த வாரம் வெளியாகும்

(கொழும்பு)

1991 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளி அடுத்த வாரம் வெளியிடப்படும் என கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1992/93 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில் ஒன்பதினாயிரம் பேர் அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு பீடத்திற்கும் அனுமதி பெறுவதற்கு எடுக்கவேண்டிய வெட்டுப் புள்ளி எத்தனை என்பது பற்றி அடுத்தவாரம் அறிவிக்கப்படும்.

கலை, விஞ்ஞான, பொறியியல், மருத்துவம், வர்த்தகம் போன்ற துறைகளுக்கு வெவ்வேறான தொகைபுள்ளி வீதம் நிர்ணயிக்கப்படும் அதாவது 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உயர்தர) பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலும் மாவட்ட அடிப்படையிலுமாக பெறும் புள்ளிகளின் தொகை நிர்ணயிக்கப்படும்.

இம் முறை மருத்துவத் துறைக்கு 820 பேர் அனுமதிக்கப்படுவர். இத் தொகை மேலும் அதிகரிக்க முடியுமா? என்பதுபற்றி ஆராயப்பட்டு வருகிறது. யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் போதிய வசதிகள் இருந்த


(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயர் கென்னத்பர்ணான்டோ யாழ்ப்பாணம் வரமுயற்சி

அங்கலிக்கன் திருச்சபையின் ஆயர் கென்னத் பர்ணான்டோ நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனவரிமாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கு முயற்சி செய்து வருகிறார்.

யாழ்ப்பாணத்துக்கான அங்கலிக்கன் ஆயரின் விஜயம் சாத்தியப்படும் பட்சத்தில் சுமார் 15நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பதற்கு ஆயர் திட்டமிட்டிருப்பதாக தெரியவருகின்றது. யாழ்ப்பாணத்தில் இவர் தங்கியிருக்கும் காலப்

(4 ஆம் பக்கம் பார்க்க)



## ஏழாலை வடபகுதி மீது

விக்கின்றன.

1992/93 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில ஒன்பதினாயிரம் பேர் அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு பீடத்திற்

வேறான தொகைபுள்ளி விதம் நிர்ணயிக்கப்படும் அதாவது 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உயர்தர) பரீட்சையில் பெற்ற மொத்

என்பதுபற்றி ஆராயப்பட்டு வருகிறது. யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் போதிய வசதிகள் இருந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு, கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு திட்டமிட்டு வருவதா


லைப் புலிகள் கொழும்பு நகரிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் தாக்குதல் நடத்தலாமெனசிறிலங்காபுலனாய்விற்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் அச் செய்தியில் விடுதலைப புலிகளின் முக்கிய உறுப்பினர் கொண்ட குழு ஒன்று கொழும்பிற்குள் ஊடுருவி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து கொழும்பு நகரத்திலும், புறநகர்ப பகுதியிலும் பலத்த பாது

மீதான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இராணுவத்தின் நடமாட்டம் வீதிகளில் அதிகரித்

தலைத் தடுக்கும் பொருட்டு பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



நேற்று முன்தினம் யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெற்ற கப்டன். மலரவனின் 'போர்உலா' நூல் வெளியீட்டு விழாவின் போது அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன், விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் சண்முகதாஸ் ஆகியோர் உரையாற்றுவதை மேலுள்ள படங்களில் காணலாம்.

## ஆயர் கென்னத்பர்ணான்டோ யாழ்ப்பாணம் வரமுயற்சி

அங்கலிக்கன் திருச்சபையின் ஆயர் கென்னத் பர்ணான்டோ நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனவரிமாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கு முயற்சி செய்து வருகிறார்.

யாழ்ப்பாணத்துக்கான அம்

கலிக்கன்ஆயரின் விஜயம் சாத்தியப்படும் பட்சத்தில் சுமார் 15நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பதற்கு ஆயர் திட்டமிட்டிருப்பதாக தெரியவருகின்றது. யாழ்ப்பாணத்தில் இவர் தங்கியிருக்கும் காலப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஏழாலை வடபகுதி மீது விமானங்கள் குண்டுவீச்சு

## வீடுகள் பல சேதம்

(நமது நிருபர்)

ஏழாலை வடக்குப் பகுதியில் நேற்று பிற்பகல் 2 45 மணியளவில் இரு சியாமார்செட்டிரக குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலில் வீடுகள் பல சேதமடைந்தன.

இரு குண்டுவீச்சு விமானங்களிலிருந்தும் நான்கு குண்டுகள் வீசப்பட்டன. ஏழாலை வடக்கு ஊரிகுளனல் புதுவைரவர் கோவிலுக்கு அண்மையில் வீசப்பட்ட இரு குண்டுகளினால் மூன்று வீடுகள் வரை சேதமடைந்தன இன்னொரு குண்டு அதேபகுதியில் இளைய தம்பி வல்லிபுரம் என்பவரது வீட்டிற்கருகில் வீசப்பட்டது. இறுதியாக வீசப்பட்ட குண்டானது இராணுவ நிலைக

ளுக்கண்மையிலுள்ள வெளிப் பிரதேச மொன்றில் வீழ்ந்து வெடித்தது.

குண்டுவீச்சு நடப்பதற்கு முன்னர் 1 45 மணியளவில் உலங்கு வானூர்தி யொன்று பல தடவை வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்

தினம் இரவு 11.30 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏழாலை வடக்குப் பகுதியை நோக்கி பலத்த எறிகணைவீச்சு நடைபெற்றது. இதனால் ஏழாலை மேற்குப் பகுதியில் வீழ்ந்து வெடித்த இரு எறிகணைகளினால் வீடு ஒன்றும் சேதமடைந்தது.

(11),(69)

## மூதூர் காட்டுப் பகுதியில் நுழைந்த படைமீது தாக்கு

திருமலை மாவட்டம் மூதூர் காட்டுப் பகுதிக்குள் நுழைய முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 10-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இத்தாக்குதல் சம்பவத்தின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை

## நிவாரண வெட்டைக் கண்டித்து

# மடு ஐ. நா. அலுவலகம் முன் அகதிமுகாம் மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா நகர் மற்றும் செட்டிகுளம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து மடுவில் தங்கியிருக்கும் மக்கள் நேற்று முன்தினம் அங்குள்ள ஐக்கியநாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய செயலகத்திற்கு முன்னால் மாபெரும் ஆர்ப்பாட்டத்தினை நடத்தினர்.

தமக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு விநியோகம் நிறுத்தப்பட்டதற்கும், நிவாரணம் வழங்குதல் என்ற பேரில் இராணுவ கோலைக்களத்திற்கு தம்மை அனுப்ப எடுக்கும் முயற்சிகளைக் கண்டித்துமே இவ்வார்ப்பாட்டம் நடைபெற்றது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வவுனியா செட்டிகுளம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து மடு அகதிமுகாமில் தங்கியிருந்த மக்களே நேற்று முன்தினம் அகதிகள் சங்க உயர் காரியாலயத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:- இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த மூன்றாண்டுகளாக மடு அகதி முகாமில் தங்கியிருந்த 1611 குடும்பங்களுக்கு கடந்த மாதம் 1ஆம் திகதி உலர் உணவு விநியோகம் நிறுத்தப்பட்டது.

இக்குடும்பங்கள் அனைத்தையும் இராணுவ கட்டுப்பாட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேல்- பி. எல். ஓ. ஒப்பந்தம் இன்றுகைச்சாத்து

(ஜெருசலேம்)

இஸ்ரவேலும், பாலஸ்தீன விடுதலை இயக்கமும் பரஸ்பரம் அங்கீகரித்துக் கொள்வதற்கான உடன்படிக்கையொன்று இன்று வாஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் வைத்து கைச்சாத்திடப்படவுள்ளது. இதற்காக நீண்டகாலமாக உலகின் மிகப் பெரிய எதிரிகளாக இருந்த பி.எல்-ஓ. தலைவரும் இஸ்ரவேலின் பிரதமரும் வெள்ளை மாளிகைக்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையில் இன்று வாஷிங்டனில் செய்து கொள்ளப்படவிருக்கும் இடைக்காலஅமைதி உடன்படிக்கைக்கு ஆதரவு வழங்கும்படி அனைத்து பாலஸ்தீன மக்களுக்கும், பாலஸ்தீன விடுதலை இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஏழைகளுக்கு எதிரான செயலினால் நான் பாவியாக விரும்பவில்லை

## டி. பி. விஜயதுங்க தெரிவிப்பு

(கண்டி)

"தமது பிள்ளைகளுக்கு எதைச் சாப்பிடக் கொடுப்பது என்று இந்த நாட்டின் ஒரு கோடியே 44இலட்சம் பேர் ஏங்குகையில் 26 இலட்சம் பேருக்குமட்டும் சம்பளத்தை உயர்த்த என்னால் முடியாது. இப்படி சம்பள உயர்வு மூலம் ஏங்கித் தவிக்கும் இந்த மக்களின் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கும் அதேவேளை அவர்கள் மீதான வரியும் அதிகரிக்கும். ஆகவே நான் ஏழைகளைத் தவிக்கவைக்கும் பாவச் செயலில் இறங்கி ஒரு பாவியாக விரும்பவில்லை."

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டிமாவட்டக் கிளையின் வருடாந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; "உத்தியோகத்தர்களுக்கு 100 சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கியது எனது அரசு மட்டுமே. கணக்கு வழக்குக்கணிப்பீடுகளால் அதைவழங்க சிறிது தாமதம் ஏற்பட்டபோது கூட சிலர் அவசரப்பட்டு அதற்கு எதிர்ப்புத்தெரிவித்தனர். மீண்டும் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். ஆனால் எங்கிருந்து வழங்குவது? இருந்தால்தானே வழங்க முடியும்? பெற்றோர் பிள்ளைகளுக்கு தம்மிடம் உள்ளவற்றையே கொடுக்கமுடியும் இல்லாதவற்றைக் கேட்டால் எப்படிக் கொடுப்பது? அதுவே எனது நிலையும்.

"இப்போதைய சம்பளம் போதாதென்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் வழங்க முடியாதபோது எப்படி வழங்குவது? நாட்டில் நடைபெறும் யுத்தத்திற்கு 2500கோடிரூபாசெலவாகிறது இந்த 'பயங்கரவாத' பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சகல தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்" என்றார்.

# வரி விளம்பரம்

## அதிர்ஷ்டசாலிக்கு அழகிய கைக்கடிகாரம்

எமதுஸ்தாபனத்தில் மணிக்கூடு றேடியோக்கள் சேவிஸ் செய்யும் வாடிக்கையாளர்களின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் ஒவ்வொரு மாத முடிவிலும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அதிர்ஷ்டசாலிக்கு அழகிய Casio கைக்கடிகாரம் பரிசாக வழங்கப்படும். ''டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ்'' 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-7339)

## பாராட்டும் பிரிவுபசாரமும்

உரும்பராய் இந்துக் கல்லூரியில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றி பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆ. ஈஸ்வரநாதனைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

## படையினர் துப்பாக்கி சூடு

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை மணியம் தோட்டம், அரியாலை பூம்புகார் கடற் பிராந்தியத்தில்கடந்த சனிக்கிழமை காலை 7 20 மணியளவில் கடற்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி பூநகரி-கல்முனைப்பகுதிச் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டனர்.

இதன் நிமித்தம் பெரும்பாலான மீனவர்கள் தமது தொழிலை கைவிட்டு கரையை வந்து சேர்ந்ததாகவும், சில மீனவர்கள் பயத்தினால் நீந்தி கரைசேர்ந்ததாகவும் மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [24]

## தமிழ் மாணவன் சாதனை

[கொழும்புத்துறை]

லண்டன் மான்செஸ்ரர் பல்கலைக்கழகத்தில் மின் இலத்திரனியற் பொறியியலாளராகப் புங்குடுதீவு மாணவன் ஏ.எஸ்.பிறேம ஜெயந்த முதற்பிரிவில் திறமைச்சித்தியடைந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. [24]

## மன்னாரில் கடும் வரட்சி

மன்னார் பகுதியில் ...

# பனை அபிவிருத்திசபை பணிகள் வன்னி மாவட்டத்திற்கும் விரிவு

பனை அபிவிருத்திசபை தனதுசெயற்பாடுகளை வன்னி மாவட்டத்தில் தீவிரப்படுத்தியிருப்பதாக தெரிய வருகிறது பிராந்திய செயலகம் திறந்து வைக்கப் பட்டிருப்பதுடன், இராமநாதபுரம், வன்னேரிக்குளம், கல்விளான் ஆகிய இடங்களில் உற்பத்தி நிலையங்களும் திறந்து வைக்கப்படவுள்ளன. மேலும் சுயதொழில் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கவும், ஏற்றுமதிச் சந்தைக்கான உற்பத்திகளை செய்வதற்கு மாசுஅரியாலை, நாகபடுவான் நாச்சிக்குடா, ஆகிய இடங்களில் உற்பத்திப் பயிற்சி நிலையங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் வேறுவில், முரசுமோட்டை, நல்லூர், வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவும், பனம் பழத்திலிருந்து பெறப்படும் பழப்பாகு பதனிடுவதற்கான தொழிற்சாலை இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 12 — 04 — 1975



வீரச்சாவு: 13 — 09 — 1990

## வீரவேங்கை தமிழ்ச்செல்வன்


(நடராசா நந்தரூபன்)

தமிழினில் செல்வனாய் நீ இருந்தாய்
தாயகம் மீட்டிட புறப்பட்டாய்
கோட்டையிலே உன் உயிர் போனதையா
கேட்டதும் நெஞ்சத்தில் துன்பத்தை ஆழ்த்தி விட்டாய்.

உன்னுடன் மரணித்த வேங்கைகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்.

வண்ணாங்சேணி,
சண்டி வீதி, பளை. (சி-7409) -குடும்பத்தினர்

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
15-11-1958

தியாக தீயில்
13-09-1988

# வடமராட்சி மீனவருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் சுமார் முப்பதாயிரம் மீனவக் குடும்பங்களுக்கு மீனவர் நிவாரணம் கிடைக்கவில்லையெனத் தெரிய வருகிறது.

தொண்டமானாறு முதல் வெற்றிலைக்கேணி வரையிலான கிராமங்களைச் சேர்ந்த இந்த மீனவர்கள் தொழில் மேற்கொள்ள முடியாத நிலையில் நிவாரணமும் கிடைக்காமல் இருப்பதால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

மீனவர் நிவாரணத்தைப் பெறுவதற்காக யாழ்.மாவட்ட அரசாங்க உயர் அதிகாரிகளுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டபோதும் பயன் எதுவும் கிட்டவில்லை என்று தெரிய வருகிறது. (யோ)

# சிறுவர் மத்தியில் போசாக்கின்மை மட்டக்களப்பில் அதிகரிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்கள் மத்தியில் போசாக்கின்மை அதிகரித்து வருவதாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. பாடசாலை மாணவர்களில் 45.3 சதவிதமான பிள்ளைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் 15 3 சதவீதமான பிள்ளைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை முழுவதிலும் போசாக்கின்மை மட்டம் 6.6 சதவீதமாக இருக்கும் போது மட்டக்களப்பில் அது 10.8 சதவீதமாக இருப்பதாகவும், வைதிக வாழ்க்கைத்தர சுட்டெண் ஏனைய மாவட்டங்களைவிட மட்டக்களப்பில் மிகக் குறைவாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 65 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்வதாகவும், மற்றைய எல்லா மவட்டங்களையும் விடக் குறைவான வருமானத்தையே மட்டக்களப்பு மக்கள் கொண்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பில் வருடாந்த தலாவீத வருமானம் 10.000 ரூபாவுக்கும் குறைவாகவே இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# வாழைச்சேனை கடதாசி ஆலையின் வைக்கோல் நிலையம் மூடப்பட்டது

## 400 தொழிலாளர் அவதி

(கொழும்பு)

வாழைச்சேனையில் இருக்கும் தேசிய கடதாசி ஆலை இனிமேல் காகித உற்பத்திக்கு வைக்கோலுக்கு பதிலாகக்கழிவு கடதாசிகளையே உபயோகிக்கும் என்று தெரியவருகிறது இதனால் கடந்த பல வருடங்களாக அம்பாறை மட்டக்களப்பு பொலநறுவை மாவட்டங்களில் செயற்பட்டு வந்த வைக்கோல் கொள்வனவு நிலையங்கள் மூடப்படவுள்ளன.

இந்த வைக்கோல் கொள்வனவு நிலையங்களில் கடமையாற்றிய நாளாந்த ஊழியர்கள், சமயா சமய ஊழியர்கள், வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதோடு, நிரந்தர ஊழியர்களுக்கு மட்டும் தொழிற்சாலைக்குள் வேறுவேலை வழங்கப்பட்டுள்ளது இவ்வகையில் சுமார் எண்ணூறு ஊழியர்களின் எதிர்காலம் கேள்விக்குரியதாகியுள்ளது.

## ஆட்டுக்கடா திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஐயாயிரம் ரூபா பெறுமதியான ''ஆட்டுக்கடா'' ஒன்று நள்ளிரவு வேளையில் திருட்டுக் கோஷ்டியினரால் களவாடப்பட்டுள்ள சமபவம் ஒன்று நவாலி வடக்குப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

உ
சிவமயம்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனை
அமரர்

## நாகநாதபிள்ளை கந்தஞானி

(ஓய்வு பெற்ற அதிபர், பாற்சபை மேற்பார்வையாளர்-தலைவர் சைவமகாசபை நாரந்தனை)

எமது சபையின் மிக நீண்டகாலத் தலைவராக இருந்து அருள்மிகு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்மாள் அருள் அனைவருக்கும் பெருக வழி சமைத்து அமரர் ...

யாழ். லயன்ஸ் கழகம்

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். லயன்ஸ் கழகத்தினால் 12-9-93 குலுக்கப்பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டின் முடிவுகள் பரிசு பெறும் இலக்கங்கள்.

[1] 1ஆம் பரிசு: 3212
[2] 2ஆம் பரிசு: 2324
[3] 3ஆம் பரிசு: 1698

ஆறுதல் பரிசுகள்: [1] 6675 [2] 1456 [3] 0680
[4] 9393 [5] 5888 [6] 5807

பரிசிற்கான இலக்கங்களையுடைய அதிர்ஷ்டசாலிகள் செவ்வாய்க்கிழமை தங்கள் சீட்டுக்களுடன் காலை 10 30—12 30 இடையில் 14/2 பிளெச்சர் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலுள்ள யாழ். லயன்ஸ் கழக செயலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

நன்றி (6005)

# நினைவு கூருகின்றோம் ...
# 1993-09-13

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-ஆரையம்பதியில் தேசவிரோதிகளுடனான சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**நியாஸ்/அருணா** (இராசராசா சதீஸ்வரன்-ஆரையம்பதி 03-மட்டு)

மணலாறு-நெடுங்கேணி, சன்னாசிப்பரந்தன் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.ராதா** (சிவகுரு தங்கவேல்-சன்னாசிப்பரந்தன், நெடுங்கேணி-மணலாறு)

வல்வெட்டித்துறையில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.குகன்** (இளங்கிங்கம் இவஞ்செழியன்-கரவெட்டி கிழக்கு-யாழ்)

1989ஆம் ஆண்டு திருமலை மூதூர் - கங்கைப்பறிச்சான், இறால்பாலம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.சுருளி** (முத்துக்குமார் பாலசிங்கம்-மூதூர்-திருமலை)

**லெப் ரூபன்** (இ.திருச்செல்வம்-திருமலை)

கொழும்பில் இரகசியப்பொலிசாரினால் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த.

**2-ம் லெப். பவான்** (இராசையா சரவணபவான்-கோட்டைக்கல்லாறு-மட்டு)

இதே பகுதியில் விபுலாநந்த மகாவித்தியாலய கட்டிடத்தினுள் வைத்து இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு எமைப்பிரிந்த,

★ **காளி** (பிள்ளையான் காளிராசா-மூதூர்-திருமலை)

மற்றும் இதேசம்பவத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவ-மாணவியராகிய சிறுவர்கள் மற்றும் இளம்பெண்கள் உட்பட 17 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு தம்பலகாமத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**லெப்.றொபின்** (—— ஐயங்கேணி-ஏறாவூர்-மட்டு)

யாழ்-கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் அஞ்சனா** (யோகேஸ்வரி பொன்னம்பலம்-798, அல்சார்வீதி,-கிளிநொச்சி)

இதேபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**நிவாஸ்** (சின்னத்தம்பி இராமச்சந்திரன்-வீராடுசேனை-மட்டு)

**சுரேன்** (சின்னத்துரை சுதாகர்-தம்பலகமம் - திருமலை)

**றெஜினோல்ட்** (விநாசித்தம்பி வினோகரன்-முள்ளிய ...

இதன் நிமித்தம் பெரும்பாலான மீனவர்கள் தமது தொழிலை கைவிட்டு கரையை வந்து சேர்ந்ததாகவும், சில மீனவர்கள் பயத்தினால் நீந்தி கரைசேர்ந்ததாகவும் மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [24]

## தமிழ் மாணவன் சாதனை

[கொழும்புத்துறை]

லண்டன் மான்செஸ்ரர் பல்கலைக்கழகத்தில் மின் இலத்திரனியற் பொறியியலாளராகப் புங்குடுதீவு மாணவன் ஏ.எஸ்.பிறேம் ஜெயந்த முதற்பிரிவில் திறமைச்சித்தியடைந்தவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. [24]

## மன்னாரில் கடும் வரட்சி

மன்னார் பகுதியில் கடும் வரட்சி நிலவுகிறது என்றும், இப்பகுதியில் கிணறுகள் வற்றிவிடும் நிலையில் இருக்கிறது என்றும் மன்னார்நகரில் குடிநீர்ப்பிரச்சினை தலைதூக்கி இருக்கிறது என்றும் தெரிய வருகிறது.

## ஆலய உற்சவம்

கொக்குவில் மேற்கு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதிநாளான இன்று செல்வி சூரியகுமாரி மார்க்கண்டுவின இன்னிசைக் கச்சேரி, வில்லிசை என்பவற்றோடு பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது.

## நிக்கோபார் சேவை இடைநிறுத்தம்


தமிழ் நாட்டிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றி வரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிக்கோபார் கப்பலின் சேவை இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும், மீண்டும் இச்சேவை ஜனவரி மாத நடுப்பகுதியின் பின்னரே ஆரம்பமாகுமெனவும் இந்திய புனர்வாழ்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியான ராஜகோபாலன் கூறியுள்ளார்.

## விளையாட்டு

அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் வருடாந்த கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் ஸ்கந்தவரோதயா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து, சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியும், நாளை பிற்பகல் ஒரு மணியளவில் கிராஸ் கொப்பர்ஸ் அணியை எதிர்த்து ஜொலி ஸ்ரார்ஸ் அணியும் விளையாடவுள்ளன. முப்பது ஓவர்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட இப்போட்டிகள் அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

---

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
15-11-1958

தியாக தீயில்
18-09-1988

## லெப்டினன்ட் குகன்

[இளஞ்சிங்கம் இளஞ்செழியன்]

ஆண்டைந்தாயினும் ஆறாத உன் நினைவு
கொண்ட இலட்சியத்தில் வேங்கையாய் நீ மாறி
மீண்டும் தமிழினம் தலைநிமிர்ந்து வாழ்வதற்கே - நீ
மாளவில்லை புதிதாய் துளிர்த்தெழுவாய்!

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

பெற்றோர், உறவினர்கள்,
நண்பர்கள்.

(5947)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

13-09-93 திங்கள்

மலர்வு:
13
—
03
—
1976



வீரச்சாவு:
13
—
09
—
1992

## வீரவேங்கை கதிரவன்

(தம்பிப்பிள்ளை சசிகுமார்)

தாயகக் கனவோடு வீரச்சாவை
தழுவிய வீரவேங்கையே - உன்னைச்
சேயாகப்பெற்ற எங்கள் பேறு பெரும் பேறு
சாயாத உன் நெஞ்சக்கனவுகள் நீங்காது
எம்மைவிட்டு எந்நாளும்.

62, அராலி வீதி, 4-ம் குறுக்கு,
புதிய குடியிருப்பு.

- குடும்பத்தினர்.

(5934)

---

...ளாக அம்பாறை மட்டக்களப்பு பொலநறுவை மாவட்டங்களில் செயற்பட்டு வந்த வைக்கோல் கொள்வனவு நிலையங்கள் மூடப்படவுள்ளன.

இந்த வைக்கோல் கொள்வனவு நிலையங்களில் கடமையாற்றிய நாளாந்த ஊழியர்கள், சமயா சமய ஊழியர்

## ஆட்டுக்கடா திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஐயாயிரம் ரூபா பெறுமதியான ''ஆட்டுக்கடா'' ஒன்று நள்ளிரவு வேளையில் திருட்டுக் கோஷ்டியிரால் களவாடப்பட்டுள்ள சமபவம் ஒன்று நவாலி வடக்குப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

---

உ
சிவமயம்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனை
அமரர்

## நாகநாதபிள்ளை கந்தஞானி

(ஓய்வு பெற்ற அதிபர், பாடசாலை மேற்பார்வையாளர்-
தலைவர் சைவமகாசபை நாரந்தனை)


எமது சபையின் மிக நீண்டகாலத் தலைவராக இருந்து அருள்மிகு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்மாள் அருள் அனைவருக்கும் பெருக வழி சமைத்து அமரராகி விட்ட நா. கந்தஞானி அவர்களின் ஆத்மா அம்பாளின் திருவடி நிழலில் வீற்றிருக்கவேண்டி அம்பாளையே பிரார்த்திப்போமாக.

(6003)

சைவமகாசபை,
நாரந்தனை.

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## முருகர் செல்லத்துரை

தோற்றம்:
10-7-1933

மறைவு:
14-8-1993

எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி இறையடி சேர்ந்த ஆவரங்கால் முருகர் செல்லத்துரை அவர்களின் அந்தியேட்டி (13-9-93) இன்று காலை 7.00 மணிக்கு அல்வாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது. உற்றார், உறவினர், நண்பர்களையும் இவ் வைபவத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

''கணேசபதி''
அல்வாய் வடக்கு,
அல்வாய்

மனைவி, பிள்ளைகள்

(6006)

---

...யப்பட்டு எமைப்பிரிந்த.

2-ம் லெப். பவான் (இராஜசயா சரணபவான்-கோட்டைக்கல்லாறு-மட்டு)

இதே பகுதியில் விபுலாந்த மகாவித்தியாலய கட்டிடத்தினுள் வைத்து இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு எமைப்பிரிந்த,

★ காளி (பிள்ளையான் காளிராசா-மூதூர்-திருமலை)

மற்றும் இதேசம்பவத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவ-மாணவியராகிய சிறுவர்கள் மற்றும் இளம் பெண்கள் உட்பட 17 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு தம்பலகாமத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

லெப்.றொபின் (—— ஐயங்கேணி-ஏறாவூர்-மட்டு)

யாழ்-கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

கப்டன் அஞ்சனா (யோகேஸ்வரி பொன்னம்பலம்-798, அக்சார்வீதி,-கிளிநொச்சி)

இதேபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

நிவாஸ் (சின்னத்தம்பி இராமச்சந்திரன்-வீராடுசேனை-மட்டு)

சுரேன் (சின்னத்துரை சுதாகர்-தம்பலகமம் - திருமலை)

றெஜினோல்ட் (விநாசித்தம்பி விநோகரன்-முள்ளியவளை-முள்ளைத்தீவு)

கப்டன் ஆனந்தபாபு (ஆறுமுகம் ஜெகதீஸ்வரன்-பூவரசங்குளம்-வவுனியா)

றொபின் (பேரின்பராசா கணேஸ்- பன்னங்கண்டி, பரந்தன் - கிளிநொச்சி)

லெப் நெப்போலியன் (சங்கரலிங்கம் விக்னேஸ்வரன்-தாவடிதெற்கு, கொக்குவில்-யாழ்)

சந்திரபாபு (யோகசிகாமணி ராகவன் - சட்டநாதர் வீதி, நல்லூர் - யாழ்)

தமிழ்ச்செல்வன் (நடராசா நந்தகுமன் -வண்ணார்பண்ணை, பனை)

விஜயன் (சந்தப்பு தெய்வேந்திரம் - கரவெட்டி தெற்கு - யாழ்)

குணேஸ் (ஜெயரட்ணராசா ஜெகநாதன் - காங்கேசன் துறை, மயிலிட்டி - யாழ்)

நிக்கலஸ் (சுப்பையா ரவி - கப்பூது, கரவெட்டி - யாழ்)

குருபரன் (சங்கரலிங்கம் யோகசேகரன் - கொக்குவில் மேற்கு - யாழ்)

மட்டு - சின்னவத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

வைசமன் (—— கோயில் போரதீவு - மட்டு)

திருமலை - கிண்ணியாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். றொபின் (மாரிமுத்து ரகுநாதன்- 3-ம் வட்டாரம், சாம்பல்தீவு - திருமலை)

மட்டுநகரில் சிறிலங்காப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழிளைஞன் சுட்டுக் கொல்லப்பட்ட ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழிளைஞன். வாழைச்சேனை இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொலைப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மிழிளைஞன்.

1992ஆம ஆண்டு மணலாறு மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-

ஒளியன்/கீரி (தெய்வேந்திரன் இராஜதேவன் - நட்டான்கண்டல் - மாங்குளம்)

கதிரவன் (தம்பிப்பிள்ளை சசிக்குமார் - அராலி வீதி - புதியகுடியிருப்பு)

வவுனியா இலுப்பைக்குளம் பகுதியில் தேசவிரோத சக்திகளின் துப்பாக்கிச் சூட்டில் பலியான தமிழ்ப்பெண்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்ட வராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7406]

### சிந்தனைக்கு

பொய் ஒற்றைக் காலில் நிற்கிறது, உண்மைக்கு கால்கள் இரண்டு.

பெஞ்சமின் பிராங்களின்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-09-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## சிறிலங்கா ஜனாதிபதியின் போலித்தனம்

"வடக்கு - கிழக்குப் பிரச்சினை இனப் பிரச்சினையல்ல. அது ஓர் இனப்பிரச்சினை என்று கூறினால், அது தவறானது. அவ்வாறு கூறவும் விடாதீர்கள். அவ்வாறான எண்ணத்தையும் கொள்ளாதீர்கள். வடக்கு - கிழக்கில் பயங்கரவாதப் பிரச்சினைதான் உள்ளது." சிறிலங்கா ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா அண்மைக் காலத்தில் இவ்வாறுதான் பேசி வருகின்றார்.

தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பதை நிரூபிப்பதற்காக, சிறிலங்கா ஜனாதிபதி சில தகவல்களையும் வெளியிட்டு வருகின்றார் தனது இரு செயலாளர்கள் தமிழர்கள் என்றும், தென்னிலங்கையில் சிங்களவர்களும் தமிழர்களும் சகோதர உணர்வுடன் வாழ்வதாகவும் அவர் சப்புக் கட்டு கட்டுகின்றார்.

டி.பி விஜேதுங்காவின் இவ் அறிவிப்புக்கள், இனப்பிரச்சினை தொடர்பாக புதியதொரு ஆரம்பத்தை அவர் தேடுவதாகவே தெரிகின்றது. ஆனால், அது நடைமுறைச் சாத்தியமற்றதும், யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டதுமாகும் அத்தோடு, தமிழ் மக்களின் பலத்த ஆட்சேபத்திற்கும் உரியதாகும். இதேவேளை, தமிழர் தரப்பிற்கு வெளியிலும், இது குறித்துக் கேள்வி எழும்பாமல் இல்லை.

அண்மையில், சிங்களப் பத்திரிகை ஒன்று "இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதொன்றல்ல என்று கூறுவது உண்மையாயின், சிறிலங்கா இராணுவத்தில் கணிசமான தமிழர்கள் இடம்பெறாதது ஏன்? எதிர்காலத்திலாவது தமிழர்களை இராணுவத்தில் சேர்ப்பது குறித்து ஆலோசிக்கின்றனரா? அவ்வாறானால், இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கு அரசு வெளியிட்ட பிரசுரங்கள் யாவும் சிங்களத்தில் வெளியிடப்பட்டது ஏன? தமிழ்மொழி அரச கரும மொழியாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள போதும் கூட தமிழ் மொழி மூலம் பத்திரிகைகளில் இத்தகைய அரச விளம்பரம இடம்பெறாதது ஏன்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளது.

சிங்கள மொழிப் பத்திரிகை எழுப்பியுள்ள இக்

## கட்சிக்குள் பலம் பெற பிரதமர் ரணில் முயற்சி

### ராவய தெரிவிப்பு

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சியினுள் தனது பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டிருப்பதாக ராவய பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப் பத்திரிகை மேலும் கூறுகையில், இதற்காக முன்னாள் ஜனாதிபதியின் மக்கள் நலன் பேணும் செயல் திட்டங்களை முன்னின்று செயற்படுத்தி வருவதாகவும், ஜனாதிபதி பதவியைப் பெறுவதே இவரது அடுத்த இலக்கு எனவும், அதற்கிசைந்தாற் போலவே பிரசார நடவடிக்கைகளையும், செயற்திட்டங்களையும் பிரதமர் வகுத்த செயற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## செய்தியாளர் மாநாடுகளை மீண்டும் கூட்ட கோரிக்கை

[கொழும்பு]

வாராந்த செய்தியாளர் மாநாடு நடத்துவது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை அரசாங்கம் மீள்பரிசிலனை செய்ய வேண்டும் என்று வெளிநாட்டு செய்தியாளர்களின் சம்மேளனம் கோரிக்கைவிடுத்துள்ளது.

இக்கோரிக்கை தொடர்பாக தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சருக்கு சம்மேளனம் அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் மேலும் இத்தகைய செய்தியாளர்மாநாடு அரசாங்கத்திற்கும் தொடர்புசாதனங்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அமைச்சரவையின் முக்கிய தீர்மானங்கள் தொடர்பாக அறிந்து கொள்ளும் முக்கிய இடமாகவும் இது இருந்தது. இதன் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு செய்தியாளர்கள் பலரும் பெரும் பயன் அடைந்தனர் என்பதுடன் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருடன் சந்தேகம் கேட்டு தெளிவு பெறவும் வாய்ப்பை அளித்து வந்தது. இந்த மாநாடுகளில்பங்கேற்ற இராணுவ அதிகாரிகள் வடக்கு, கிழக்கு பகுதில் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக பெறுமதிமிக்க தகவல்களை தந்து வந்தனர் என்றும், எனவே இத்தகைய மாநாட்டை மீண்டும் கூட்டுவது பற்றி அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இக் கடிதத்தில் பி.பி.சியின் கொழும்பு முகவர் சிவாநந்தனாவும், அப்ராஹிம் முகர்ஜியும் கையெழுத்திட்டுள்ளனர்.

## பிறப்பு சான்றிதழை ஏற்க கொழும்பு அதிகாரிகள் மறுப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிறந்தவர்களுக்காக யாழ்ப்பாண செயலக பதிவுகாரரினால்வழங்கப்படும் பிறப்பு சான்றிதழை ஏற்றுக்கொள்ள கொழும்பிலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களம் மறுப்பு தெரிவித்துவருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் கடவுச்சீட்டு பெறுவதற்காக இந்த பிறப்பு சான்றிதழுடன் விண்ணப்பிக்கும் போது அதனை ஏற்க மறுக்கும் திணைக்கள அதிகாரிகள் மாளிகாவத்தை பதிவுகாரர் அலுவலகத்திலிருந்து பிறப்புச் சான்றிதழ் பெற்று வருமாறு கோருகின்றனராம்.

இதனால் யாழ் மாவட்ட செயலக பதிவுகாரர் பிரிவினால் வழங்கப்படும் பிறப்பு சான்றிதழ் செல்லுபடியற்றதா என்ற கேள்வி பொதுமக்களிடையே எழுந்துள்ளது.

## போதைப்பொருள் கடத்தல் தடுக்க அமெரிக்கா உதவி வழங்கும்

[கொழும்பு]

போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதில் சார்க் அமைப்பு நாடுகளுக்கு அமெரிக்கா உதவி வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

தெற்காசிய நாடுகளிடையே அதிகரித்து வரும் போதைப் பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்காக போதைப் பொருள் தடுப்பு பணியகத்திற்கு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் கம்ப்யூட்டர் சாதனம் ஒன்றை அன்பளிப்பு செய்துள்ளார்.

போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய விடயங்களை சேமித்து வைப்பதற்காக இந்தக் கம்ப்யூட்டர்பயன்படுத்தப்படவுள்ளது.

### இரணவில வானொலி நிலையம் பற்றிய

## இல. - அமெரிக்க உடன்பாடு வெளியிடப்பட வேண்டும்

### இரணவில கமிட்டி கோரிக்கை

(கொழும்பு)

இரணவிலவில் அமைக்கப்படும் வானொலி நிலையம் தொடர்பாக இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டை பொது மக்களுக்கு வெளியிட வேண்டும் என்று இரணவில கமிட்டி கோரிக்கை விடுத்துள்ளது.

இரணவிலவில் அமெரிக்க வானொலி நிலையம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மக்கள் கமிட்டி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

இத்திட்டத்திற்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டத்தை இராணுவ பலத்தால் நசுக்க நினைப்பதை தாம் முழுமையாக எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 1987ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இரு நாடுகளும் இரணவில அமெரிக்க வானொலி அமைக்கும் திட்டத்தை எதிர்த்திருப்பதாகவும் கமிட்டி சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் இவ்வானொலி நிலையம் அமைக்கப்படுவதால் ஏற்படக் கூடிய ஆபத்தையும், நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையும் அக்கமிட்டி எடுத்துக்காட்டியுள்ளது.

இதே வேளை அமெரிக்கா மூன்றாம் மண்டல நாடுகளுக்கு எப்போதும் துரோகம் இழைக்காது என்றும், எனவே மக்கள் இந்த வானொலி நிலையம் தொடர்பாக அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும், இவ் வானொலி நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## புலிகளுடன் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் செல்ல தயார்

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணம் செல்லவும் தயாராக இருக்கிறேன் என்று அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், இத்தகைய சங்கங்களில் அரசியல் கலந்து விடக்கூடாது என்பதில் தான் உறுதியான முடிவு எடுத்திருப்பதாகவும் கூட்டுறவு அமைப்புக்களின் உறுப்பினர்கள். நேர்மையோடும் அர்ப்பணிப்போடும் பணியாற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குதான் முயற்சி எடுத்திருப்பதாகவும், இது பற்றி கொழும்பு வந்திருந்த யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு ஊடாக தகவல் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக நிர்வாகம் செயற்படுகின்றது

### அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

அரசாங்க நிர்வாக இயந்திரம் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகவே உள்ளது பெற்றுக்கொண்ட உரிமைகளை நடைமுறைப்படுத்திக்கொள்வதில் கூட எமது மக்கள் பல்வேறு முட்டுக்கட்டைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது என்று இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

"ஜனநாயக நிறுவனங்களில் பெருந்தோட்டத்துறை தலைமைத்துவத்தின் செயற்பாடுகள்" என்ற தலைப்பில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் மனித உரிமைகள் பற்றி இன்று பலமாகக் குரல் எழுப்பப்படுகின்றது. ஆனால் இந்திய வம்சாவளியினரான மக்களுக்கு அவை மறுக்கப்பட்டிருந்தபோது அவர்களுக்காக குரல் எழுப்ப எவரும் முன்வரவில்லை. இ.தொ.கா கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இந்த மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று வெற்றியும் பெற்றுள்ளது.

இந்த வெற்றிக்கு எவரும் தனிப்பட்ட முறையில் உரிமை கோர முடியாது. இது கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி மக்களின் ஒன்றுபட்ட சக்திக்கு கிடைத்த வெற்றி என்று கூறுவதே பொருந்தும்.

நான் அமைச்சராக இருந்த போதும், அந்தப் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென ஒருபோதும் எண்ணியதில்லை. என்னைப் பொறுத்தவரை எனது மக்களின் நலம் தான் முக்கியம். இதனையே இ.தொ.கா.சாரியான ஏனையோரும் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இ.தொ.கா.சார்பில்பாராளுமன்றம் மாகாணசபைகள் பிரதேசசபைகள் என்பவற்றிற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில், கைத்தொழில் ராஜாங்க அமைச்சர்செல்லச்சாமி, ஈபர்ட்மன்றப்பிரதிநிதி பிளாட்டோ இ.தொ.கா ஆலோசகர் என்.விஜிபசிங்கம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டதுமாகும் அத்தோடு, தமிழ் மக்களின் பலத்த ஆட்சேபத்திற்கும் உரியதாகும். இதேவேளை, தமிழர் தரப்பிற்கு வெளியிலும், இது குறித்துக் கேள்வி எழும்பாமல் இல்லை.

அண்மையில், சிங்களப் பத்திரிகை ஒன்று ''இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதொன்றல்ல என்று கூறுவது உண்மையாயின், சிறிலங்கா இராணுவத்தில் கணிசமான தமிழர்கள் இடம்பெறாதது ஏன்? எதிர்காலத்திலாவது தமிழர்களை இராணுவத்தில் சேர்ப்பது குறித்து ஆலோசிக்கின்றதா? அவ்வாறானால், இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கு அரசு வெளியிட்ட பிரசுரங்கள் யாவும் சிங்களத்தில் வெளியிடப்பட்டது ஏன? தமிழ்மொழி அரச கரும மொழியாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள போதும் கூட தமிழ்மொழி மூலம் பத்திரிகைகளில் இத்தகைய அரச விளம்பரம் இடம்பெறாதது ஏன்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளது.

சிங்கள மொழிப் பத்திரிகை எழுப்பியுள்ள இக்கேள்விகள் வழமையான போக்கிற்கு மாறானவையாக இருப்பினும், டி. பி. விஜேதுங்காவின் பேச்சிற்குப் பொருத்தமான பதில்கள் அவற்றில் உள்ளடங்கியுள்ளன. அத்தோடு, இப்பத்திரிகைகளின் கேள்விகள் சிங்கள மக்கள் மத்தியில், சில சிந்தனைக்கான தூண்டுதல்களையும் ஏற்படுத்தக்கூடும்.

ஆனால், இப்பத்திரிகை எழுப்பியுள்ள கேள்விகள் மட்டும்தான் இதற்குரிய பதில்கள் என்பதல்ல. இது குறித்து இன்னும் பல கேள்விகள் எழுப்ப முடியும். இதில், சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்துள்ள உதாரணங்கள் குறித்தே பல கேள்விகள் உள்ளன. அதாவது, தனது செயலாளர்களில், இருவர் தமிழர்கள் எனக் கூறும் ஜனாதிபதி, சிறிலங்காவில் உள்ள மொத்த அமைச்சுக்களில் உள்ள செயலாளர்களில் எத்தனை பேர் தமிழர்கள் உள்ளனர் என்பதைக் கூறுவாரா? அது குறைந்த இன விகிதாசார அளவில் இல்லை என்பதற்கு அவரால் என்ன விளக்கம் கூற முடியும்?

அதேபோன்றே அரச பதவிகளில் எத்தனை சதவீதம் தமிழ்மக்கள் உள்ளனர் என்பதை அவரால் வெளியிட முடியுமா? வெளிநாட்டு இராஜரீக சேவையில் உள்ள தமிழர்களின் எண்ணிக்கை குறித்து அவரால் பெருமையாகக் குறிப்பிட முடியுமா? இந்நியமனங்களில் இனபேதம் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதை அவரால் மறுக்க முடியுமா? இந்நிலையில், அரசு கூறுவது போல் குறைந்தது இன விகிதாசாரம் கூட கடைப்பிடிக்கப்படாமைக்கு இன ஒதுக்கலைத் தவிர அவரால் வேறு காரணம் கூற முடியும்?

இவை ஒரு புறம் இருக்க, தென்னிலங்கையில் சிங்களவர்கள் போல் தமிழர்களும் வாழ்கின்றனர் என்றால், கடந்த காலத்தில் தமிழருக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் பேசக, தற்போதைய கொழும்பிலும், அதன் புற நகர்ப்பகுதியிலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்படுவது ஏன்? இதில் ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றி அனைவரும் தடுத்து வைக்கப்படுவது ஏன்? மேலும் தமிழர் நடமாட்டத்திற்கு கட்டுப்பாடு விதிப்பது ஏன்? தமிழர் என்ற காரணமின்றி வேறு என்ன காரணம உண்டு. இது இனவாதமின்றி வேறென்ன?.

இந்நிலையில் சிறிலங்கா ஜனாதிபதி ஒன்றையே திரும்பத் திரும்பக் கூறினால் பொய்யும் மெய்யாகிவிடும் என எண்ணுகிறார் போலும். ஆனால், இது ஒரு போதும் சாத்தியப்படப் போவதில்லை. உலகத்தை ஏமாற்றி விடலாம் என எண்ணும் அவரது திட்டம் வெற்றி அளிக்கப்போவதில்லை. இறுதியில் இதனால் ஏமாறப்போவது சிறிலங்கா ஜனாதிபதியும், சிங்கள அரசியல்வாதிகளுமாகவே இருப்பார்கள், நட்டமடைவதும் சிறிலங்காவாகவுமே இருக்கும்.

---

குடியகல்வு திணைக்களம் மறுப்பு தெரிவித்துவருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் கடவுச்சீட்டு பெறுவதற்காக இந்த பிறப்பு சான்றிதழ் செல்லுபடியற்றதா என்ற கேள்வி பொதுமக்களிடையே எழுந்துள்ளது.

இதனால் யாழ் மாவட்ட செயலக பதிவுகாரர் பிரிவினால் வழங்கப்படும் பிறப்பு

# போதைப்பொருள் கடத்தல் தடுக்க அமெரிக்கா உதவி வழங்கும்

[கொழும்பு]

போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதில் சார்க் அமைப்பு நாடுகளுக்கு அமெரிக்கா உதவி வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

தெற்காசிய நாடுகளிடையே அதிகரித்து வரும் போதைப் பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்காக போதைப் பொருள் தடுப்பு பணியகத்திற்கு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் கம்பியூட்டர் சாதனம் ஒன்றை அன்பளிப்பு செய்துள்ளார்.

போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய விடயங்களை சேமித்து வைப்பதற்காக இந்தக் கம்பியூட்டர் பயன்படுத்தப்படவுள்ளது.

---

திரம் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகவே உள்ளது பெற்றுக்கொண்ட உரிமைகளை நடைமுறைப்படுத்திக்கொள்வதில் கூட எமது மக்கள் பல்வேறு முட்டுக்கட்டைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது என்று இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

''ஜனநாயக நிறுவனங்களில் பெருந்தோட்டத்துறை தலைமைத்துவத்தின் செயற்பாடுகள்'' என்ற தலைப்பில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் மனித உரிமைகள்

இந்திய வம்சாவளியினரான மக்களுக்கு இவை மறுக்கப்பட்டிருந்தபோது அவர்களுக்காக குரல் எழுப்ப எவரும் முன்வரவில்லை. இ.தொ.கா கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இந்த மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று வெற்றியும் பெற்றுள்ளது.

இந்த வெற்றிக்கு எவரும் தனிப்பட்ட முறையில் உரிமை கோர முடியாது. இது கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி மக்களின் ஒன்றுபட்ட சக்திக்கு கிடைத்த வெற்றி என்று கூறுவதே பொருந்தும்.

நான் அமைச்சராக இருந்த

டுமென ஒருபோதும் எண்ணியதில்லை. என்னைப் பொறுத்தவரை எனது மக்களின் நலம் தான் முக்கியம். இதனையே இ.தொ.கா.சார்பான ஏனையோரும் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இ.தொ.கா.சார்பில்பாராளுமன்றம் மாகாணசபைகள் பிரதேசசபைகள் என்பவற்றிற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில், கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி, ஈபர்ட்மன்றப்பிரதிநிதி பிளாட்டோ இ.தொ.கா ஆலோசகர் என்.விஜிபசிங்கம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

---

# எல்லைப்பிரச்சினைக்கு தீர்வுகாண நட்பு ரீதியிலான அணுகுமுறை

## - இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ்

[டில்லி]

சீனாவும், இந்தியாவும் எல்லைப் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியாவும் சீனாவும் நடைமுறைக்கு ஏற்ற, நட்பு ரீதியிலான அணுகுமுறையொன்றைக் கடைப்பிடித்திருப்பதாக இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

சீனாவுக்கும், தென்கொரியாவுக்குமாக ஆறு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சியோல்நகரத்தில் இருந்து புதுடில்லி திரும்பியபோது விமானத்தில் பத்திரிகையாளர்களுடன் பேசுகையில் மேலும்,

காலப்போக்கில் பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும் என்றும், இரு நாடுகளும் ஒரே திசையில் செல்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும் என்றும் தெரிவித்தார்.

1988-ல் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி சீனாவுக்கு விஜயம் செய்தபோது அமைதியும் சமாதானமும் என்ற கருத்து எட்டப்பட்டதாகவும் அதற்கு இறுதி வடிவம் கொடுப்பதுவே இப்போது நடந்ததாகும் என்றும். மேலும் இந்த உடன்படிக்கையெழுத்துடனேயே நின்று விடாமல் செயற்படுத்துவதற்கும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், எல்லைப்புற வர்த்தகத்தை ஊக்குவிப்பது உட்பட எல்லா முனைகளிலும் திருப்தி காணப்படுவதாகவும் தெரிவித்தார். இஸ்ரேலிய - பாலஸ்தீனிய உடன்பாட்டிற்கு வரவேற்பு தெரிவித்ததுடன் எல்லா வகையான தீவிரவாத நடவடிக்கைகளையும் சீனா கண்டித்துள்ளதாகவும் மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

புதுடில்லி விமான நிலையத்தில் அவரை மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் உட்பட மற்றும் பல அமைச்சர்களும், அதிகாரிகளும் பிரமுகர்களும் வரவேற்றனர்.

### கடல் எல்லை ஒப்பந்தம் இந்தியா செய்துள்ளதாம்

அட்மிரல் ராம்தாஸ் தெரிவிப்பு

(டில்லி)

கொங்கொங். தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளுடன் கடல் எல்லை ஒப்பந்தம் ஒன்றை இந்தியா செய்து கொண்டிருப்பதாக இந்திய கடற்படைத்தளபதி அட்மிரல் ராம்தாஸ் கூறியுள்ளார்.

அண்மையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், இந்தியாவின் கடல் எல்லையையும், வர்த்தகத்தையும் பாதுகாக்கும் முக்கிய பொறுப்பு இந்தியக் கடற்படைக்கு இருப்பதாகக் குறிப்பிட்டார்

அத்துடன் ஐ.என். எஸ். விக்ரம் கப்பலுக்கு உதவியாக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட விமானந்தாங்கிக் கப்பல் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் தயாராகிவிடும் என்றும் தெரிவித்தார்.

கிழக்கு கடற்படைத் தளத்தில் வண்ணம்மிகு அணிவகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

புதுடில்லியில் நடந்த

### குண்டு வெடிபபு புலனாய்வுக்கு சிறப்புக்குழு நியமிககப்பட்டுள்ளது

(டில்லி)

புதுடில்லியில் நேற்று முன்தினம் நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவம் பற்றி புலனாய்வுகளை மேற்கொள்வதற்காக சிறப்பு புலனாய்வுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மத்திய புலனாய்வுக் கழகம் (சி. பி. ஐ.) உளவு விசாரணைப் பிரிவு, அமைச்சரவை செயலகம், டில்லி பொலிசார் என்பவற்றை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டிருக்கும் இந்த சிறப்பு புலனாய்வுப்பிரிவு உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்கும் என்று மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் தெரிவித்தார்.

இந்தக் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக ஆழ்ந்த அதிர்ச்சி தெரிவித்திருக்கும் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

# ஒற்றைப்பாலம் தொகுதியில் சிவராமனுக்கு பெரு வெற்றி

(திருவனந்தபுரம்)

கேரள மாநிலத்தின் ஒற்றைப்பாலம் மக்களவைத் தொகுதிக்கான நடந்த இடைத் தேர்தலில் இடதுசாரி முன்னணி வேட்பாளர் சிவராமன் வெற்றி பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த சிவராமன் ஐக்கிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளரான பாலகிருஷ்ணனை ஒரு லட்சத்துக்கும் அதிகமான வித்தியாசத்தில் தோற்கடித்தது குறிப்பிடக் கூடியதாகும். பாரதீய ஜனதாக் கட்சி வேட்பாளர் உட்பட ஒன்பது பேர் தமது கட்டுப் பணத்தையும் பறிகொடுக்க நேர்ந்தது.

மக்களவைத் தொகுதியான ஒற்றைப்பாலம் தொகுதியில் தேர்ந்து எடுக்கப்பட்ட கே. ஆர். நாராயணன் இந்திய குடியரசின் துணைத்தலைவர் பதவி ஏற்றுக் கொண்டதால் இந்த தேர்தல் நடைபெற்றது சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

# ரபீனும் அரபாத்தும் வாஷிங்டன் பயணம்

[வாஷிங்டன்]

இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ரபீனும், பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்தும், சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்காக வாஷிங்டன் செல்லவுள்ளனர்.

இன்று வெள்ளை மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பிரமாண்டமான வைபவம் ஒன்றில் இவ் இருவரும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளனர்.

இஸ்ரேலும், பாலஸ்தீன விடுதலை இயக்கமும், பரஸ்பரம் ஒன்றை ஒன்று அங்கீகரித்திருப்பது ஜெருசலேமைத் தலை நகரமாகக் கொண்டு பாலஸ்தீனிய இராஜ்யம் அமைக்கும் பாதையில் ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கை ஆகும் என்று இஸ்லாமிய மாநாட்டு ஸ்தாபனம் கூறியுள்ளது.

# இஸ்ரேலுக்கான உதவிகள் குறைக்கப்பட மாட்டா

(வாஷிங்டன்)

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்துடன் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட முன்வந்தமைக்காக இஸ்ரேலுக்கு இராணுவ மற்றும் பொருளாதார உதவிகள் குறைக்கப்பட மாட்டாது என்று அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் கூறியுள்ளார்.

ஆனால் பிராந்திய அமைதியை கட்டி எழும்புவதற்காக ஐரோப்பா, யப்பான், மற்றும் அரபு நாடுகள் உட்பட உலகின் செல்வந்த நாடுகளின் உதவி கோரப்படும் என்று அவர் தெரிவித்தார்.

---

### செகந்திரபாத்தில் குண்டு வெடிப்பு

(டில்லி)

ஆந்திரப்பிரதேசம் செகந்திரபாத் ரயில் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ரயில்வே அதிகாரிகள் இருவர் கொலையுண்டனர். மற்றும் இருவர் காயமுற்றனர். நேற்றுக் காலையில் இக் குண்டு வெடிப்பு நேரிட்டது.

ஈழநாதம்

# ராஜீவின் மெரினாக் கூட்டத்தில் சிவராசன் கலந்து கொண்டார்

## கொலை வழக்கில் அரச தரப்பில் தெரிவிப்பு

ராஜீவ் கொலை சதித்திட்டத்திற்கு உடந்தை எனக் கூறப்படும் இரும்பொறை, பாக்கியநாதன் ஆகியோருடன் திராவிடர் கழக ஒருபிரிவைச் சேர்ந்த பேரறிவாளன் தொடர்பு வைத்திருந்தார் என ராஜீவ் கொலை வழக்கு குறித்து விசாரித்துவரும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி சித்திக்கிடம் அரசு தரப்பு வழக்கறிஞர் டான்டே தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில்; சிவராசன் வயர்லெஸ் செட் சாதனத்தை இயக்க பேரறிவாளன் சார்பாட்டரி வாங்கித் தந்திருக்கிறார். மேலும், மே 7ஆம் திகதி வி. பி. சிங்கின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அதைப்போல் ஏப்பிரல் 18ஆம் திகதி மெரினா கடற்கரையில் ராஜீவ்காந்தி, ஜெயலலிதா கலந்துகொண்ட கூட்டத்திற்கும் அவர்கள் சென்றுள்ளனர்.

பேரறிவாளனுக்கு அனுப்பப்பட்டகடிதத்தின் வாயிலாக ராஜீவ்காந்தி கொலைபற்றி அவர் ஏற்கனவே அறிந்திருக்கிறார் எனத் தெரியவந்துள்ளது.

கொலைச்சம்பவம் நடந்த பிறகு எதிரி எப்படி பல்வேறு இடங்களில் தப்பித்துச் செல்ல ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு மாறி மாறிச் சென்றுள்ளார் என்பதையும் அவர் வைத்திருந்த விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்ட கையேடுகள் உள்ளிட்டவை குறித்தும் டான்டே நீதிமன்றத்தில் விபரித்தார்.

சிவராசன், சுபா உள்ளிட்டோர் தற்கொலை செய்து கொண்டபின் சாந்தனின் அறிவுரைப்படி இரும்பொறை படகில் இலங்கை சென்று தமிழகத்தில் உள்ள நிலைமை குறித்து யாழ்ப்பாணத்திலுள்ள விடுதலைப்புலிகள் தலைமைக்கு அறிவிக்கதிட்டமிட்டபோது இந்தியக்கடற்படை இடைமறித்தது. படகில் இருந்த இருவிடுதலைப்புலிகள் சயனைட் அருந்தி தற்கொலை அவற்றில் ஒன்று திருச்சி சாந்தன், விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுக்கும் மற்றது இரும்பொறைக்கும் எழுதப்பட்டிருந்தன.

'புலிகளின் தலைவரின் உத்தரவுப்படி ராஜீவ் காந்தியை கொன்றோம்' என்று சிவராசன் கூறியுள்ளார். பெங்களூரில் தலைமறைவாக இருந்தபோது தனசேகரனிடம் இத்தகவலை சிவராசன் தெரிவித்துள்ளார்.

தனசேகரன் மேட்டூர் நிலக்கிழார் டாங்கர் லாரிகளுக்கு சொந்தக்காரர். விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டவர். கடந்த 80 ஆம் ஆண்டு முதல் சாந்தனின் கூட்டாளியாக இருந்து வருகிறார். கொலை சந்தேக நபர்கள் தப்பிச் செல்வதற்கும் அவர்கள் தலைமறைவாக இருப்பதற்கும் இவர் பெரிதும் உதவியுள்ளார்.

சென்னையை விட்டு சிவராசன் மற்றும் குழுவினர் தப்பிக்க முடியாதபடி சி. பி. ஐ. முற்றுகையிட்ட சமயத்தில் சாந்தன் திருச்சியில் இருந்து மேட்டூருக்கு தொடர்பு கொண்டு, கடந்த 91 ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் திகதி தனசேகரனை அழைத்தார். சென்னையில் இருந்த சிவராசன், சுபா, நேரு ஆகியோர்களை பெங்களூருக்கு கடத்திச் செல்லும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். அதன்படி தனசேகரன் மேட்டூரிலிருந்து டாங்கர் லொறியை எடுத்துக் கொண்டு சேலம் வந்தார். சேலத்தில் விக்கி, அம்மான் மற்றும் இருவரை ஏற்றிக் கொண்டு சென்னை வந்தார். பூந்தமல்லியில் அவர்களை இறக்கிவிட்டு திரும்பிவரும் வரை காத்திருக்கும்படி கூறினார். பின்னர் சென்னை புறநகர் பகுதியான ஆழ்வார் திருநகருக்கு சென்றார். அங்கிருந்த சிவராசன், சுபா ஆகியோரை டாங்கர்களுக்குள் ஏற்றிக் கொண்டார். பூந்தமல்லியில் காத்திருந்த சாரியில் விக்கி இறங்கி டெலிபோன் மூலம் பெங்களூருக்கு தொடர்பு கொண்டார். பெங்களூரில் உள்ளவர்களுக்கு சிவராசன் வந்துகொண்டிருக்கும் தகவலை தெரிவித்தார். கிருஷ்ணகிரி சென்றதும் மீண்டும் டெலிபோன் மூலம் தொடர்பு கொண்டார்.

டாங்கருக்குள் சிவராசன், சுபா, வயர்லெஸ் ஆபரேட்டர் நேரு ஆகியோர் ஒளிந்து கொண்டனர் லொறி முன்புறத்தில் தனசேகரன், ரங்கன், விக்கி மற்றவர்களும் அமர்ந்திருந்தனர். பெங்களூர் சென்று அவர்களை பத்திரமாக ஒப்படைத்தார். பெங்களூரில் தலைமறைவாக இருந்தபோது சிவராசனிடம் எதற்காக ராஜீவை கொலை செய்தீர்கள் என்று கேட்டார் அதற்கு சிவராசன் 'தலைவர் பிரபாகரன் உத்தரவிட்டார். கொன்றேன்' என்று பதில் கூறியுள்ளார். சுபாவை எதற்காக இந்தியாவுக்கு கூட்டிவந்தீர்கள் என்றும் தனசேகரன் கேட்டார். அதற்கு 'மனித குண்டு தனுவுக்கு மாற்று இவர்' என்றும் கூறியுள்ளார்.

89 ஆம் ஆண்டில் ராஜ சூர்யா என்ற ரங்கன் சென்னைக்கு வந்தார். அங்கீகாரம் பெறாமல் டிராவல் ஏஜென்ட் போல் பணியாற்றினார். இரும்பொறை, பெரியசாந்தன் மற்றும் பொட்டம்மான் ஆகியோருடன் தொடர்பு கொண்டார். காயமடைந்து வரும் புலிகளுக்கு மருத்துவ சிகிச்சையளிக்க உதவினார்.

இக்கொலை வழக்கில் சி. பி. ஐ. அதிகாரிகள் சிவராசன் குழுவினரை தேடத் துவங்கிய போது, ரங்கன் தனது வீட்டிற்கு அந்த குழுவினரை அழைத்துச் சென்று தலைமறைவாக இருக்க உதவினார். பின் பெங்களூருக்கு அவர்கள் தப்பிச் செல்லவும் உதவினார். பெங்களூருக்கு அவர்கள் தப்பியபோது சிவராசனின் சாரதியாக ரங்கன் இருந்தார்.

பெங்களூர் கோனக் குண்டேவில் சிவராசன் குழுவினர்

## நங்கூரம் ஆண்டுமலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நங்கூரம் சமூக - அறிவியல் ஏடு ஆண்டுமலர் வெளியீட்டு வைபவம்யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நாளை பி. ப. 4 30மணியளவில் நடைபெறவுள்ளது.

கடந்த ஒரு வருட காலப் பகுதியில் நங்கூரத்தில் இடம் பெற்ற கவிதை குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கான பரிசளிப்பும் இந்த வைபவத்தில் இடம்பெறும். ''குற்றவாளிக் கூண்டில் மனிதன்'' என்னும் விடயம் பற்றிய வழக்காடு மன்றமும் நடைபெறவுள்ளது.

## லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 1993-ஆம் வருடத்திற்கான பட்டமளிப்பு விழா வைபவத்தையொட்டி இராமநாதன் நுண்கலைக் கழகம் அளித்த கலை நிகழ்ச்சி நேற்றுக் காலை கைலாசபதி அரங்கில் நடைபெற்றது.

நா. வி. மு. நவரத்தினம் அவர்களின் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பித்தகலைநிகழ்ச்சிகளில் வாத்திய வஸந்தம் கர்நாடக இசை, ஆடல் அமுதம், திரிதான சங்கமம் (தான வாத்தியம்) ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன.

இன்று மாலை 3 மணிக்கு பட்டமளிப்பு விழா வைபவத்தையொட்டி பெருமாட்டிலீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. இந்தப் பேருரையை யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் நிகழ்த்துவார்.

ஆயர்

பகுதியில் முக்கிய பிரமுகர்கள் பலரைச் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்கலை

போதிலும் மிகக் குறைந்தவர்களே அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

பல்கலையில்

டால் மட்டுமே மேற்படி பயிற்சி நெறியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகால

## முதலுதவி ஒழுங்கமைப்பில் வைத்தீஸ்வரா முதலிடம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் கடமையாற்றிய சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினருக்கு இடையில் முதலுதவி ஒழுங்கமைப்பு என்பவற்றுக்கான போட்டியில் பின்வரும் கல்லூரிகள் தெரிவு செய்யப்பட்டன: முதலாம் இடம்-யா/வைத்தீஸ்வராக் கல்லூரி இரண்டாம் இடம் -யாழ் மத்தியகல்லூரி. மூன்றாம் இடம் - கொக்குவில் இந்துக்கல்லூரி, மற்றும் சென் ஜோன்ஸ் கல்லூரி.

## இஸ்ரேல்

மத்திய கிழக்கில் பூசலைத் தீர்க்க உதவும் உடன்பாடு என்று மேற்படி உடன்பாட்டை பாலஸ்தீன விடுதலை இயக்கம் வர்ணித்துள்ளது.

இஸ்ரேலுடனான மேற்படி உடன்பாடு பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஒற்றுமையை உடைக்குமளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது இது பாலஸ்தீன மக்களது உரிமையை பலவீனப்படுத்தி விட்டதாக பி. எல் ஓவின் வெளியுறவு அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார் அத்துடன் பி.எல். ஓவின் செயற்குழு உறுப்பினர்கள் நான்குபேர் பதவிவிலகியுள்ளனர்.

இந்த உடன்படு பாலஸ்தீனியர்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவில்லை, பாலஸ்தீன நாட்டையோ அல்லது பாலஸ்தீன மக்கள் தமது தாயகம் திரும்பும் உரிமையையோ அங்கீகரிக்கவில்லை என்றும் இது பி. எல். ஓவை மட்டுமே அங்கீகரிக்கிறது பி எல் ஓ என்பது வெறும் கட்சி அல்லது இயக்கம் மட்டுமே என்று பதவிவிலகியவர்களில் ஒருவரும் பி எல். ஓவின் பண்பாட்டுப்பிரிவின் தலைவருமான அத்தல்லா கருணி கூறியிருக்கின்றார்.

தற்கால வரலாற்றில் இந்த உடன்பாடுதான் முதன்முறையாக பாலஸ்தீன மக்களின் உரிமையை அங்கீகரித்தது என்று பிஎல் ஓ அறிக்கை ஒன்றில் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனினும் முக்கியமான கோரிக்கைகள் இன்னமும் கைவிடப்படவில்லை. ஜெருசத்தின் நிலைஎன்ன? அகதிகள் திரும்புதல், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இஸ்ரவேலியர்களின் குடியேற்றத் திட்டத்தின் எதிர்காலம் என்ன? போன்ற விடயங்களைப் பொறுத்தே முழுமையான அமைதி ஏற்படும் என்றும் மேற்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் தேசிய ஒருமைப்பாட்டைப்பேணுவதே பாலஸ்தீனியர்கள் ஒவ்வொருவரது கடமையாகும் எனவே மேற்படி உடன்பாட்டை அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இன்று கைச்சாத்திடப்படவிருக்கும் உடன்படிக்கையில் இஸ்ரவேலின் தரப்பில் வெளியுறவு அமைச்சர் சிமோன்பரஸ் அவர்கள் கைச்சாத்திடுவார் என்று கூறப்படுகிறது. இந்த உடன்பாட்டை இஸ்ரவேலின் அமைச்சரவை ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

அதேவேளை பி.எல்.ஓ வின் தலைவர் அரபாத் கியூனிஸ் நகரில் இருந்து வாஷிங்டனுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். இவருடன் பி எல்.ஓ. வின் மூத்த அதிகாரிகள் சென்றுள்ள போதிலும் பி எல். ஓவின் வெளியுறவு அமைச்சர் கரோகடாமி அர

யாழ். மாவட்ட மக்களுக்கோர் சுபசெய்தி!

ஈழநாதம்

(வன்னிப் பதிப்பு)

ஈழநாதம் (வன்னிப் பதிப்பு) நாளோடு வெளிவந்து கொண்டிருக்கிறது.

உங்கள் விளம்பரங்களை

(மரண அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள் உட்பட )அவ் ஏட்டில் வெளிக்கொணர விரும்பினால் இரவு 8. 00 மணிக்கு முன்னதாக தொடர்பு கொள்ளவும்.

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
(வைமன் வீதி)
யாழ்ப்பாணம்.

(இ)

JAFFNA COLLEGE CEYLON 1823 1872 JESUS CHRIST THE LIGHT OF LIFE

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Commercial Bank அருகில்)

முழுநேர வகுப்புக்கள் சிறந்த நூலக வசதியுடன் ஆரம்பமாக இருக்கின்றன. பின்வரும் வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. B A. Part - I — யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. B A. Part - II — " "
3. G A. Q — " "
4. G. S. Q. — பேராதனைப் பல்கலைக்கழகம்

பாடங்கள்: G A. Q. B A. வகுப்புகள் தமிழ், கிறிஸ்தவம், இந்துநாகரிகம், அரசியல் விஞ்ஞானம், ஆங்கில இலக்கியம், மெய்யியல்.

G. S. Q பாடங்கள்: கணிதம், புள்ளிவிவரவியல்

விண்ணப்பப் படிவங்களை மேற்படி விலாசத்திற்கு 15 09. 1993 தொடக்கம் கிழமை நாட்களில் காலை

இடங்களில் தப்பித்துச் செல்ல ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு மாறி மாறிச் சென்றுள்ளார் என்பதையும் அவர் வைத்திருந்த விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்ட வையேடுகள் உள்ளிட்டவை குறித்தும் டான்டே நீதிமன்றத்தில் விபரித்தார்.

சிவராசன், சுபா உள்ளிட்டோர் தற்கொலை செய்து கொண்டபின் சாந்தனின் அறிவுரைப்படி இரும்பொறை படகில் இலங்கை சென்று தமிழகத்தில் உள்ள நிலைமை குறித்து யாழ்ப்பாணத்திலுள்ள விடுதலைப்புலிகள் தலைமைக்கு விளக்கமளிக்கத்திட்டமிட்டபோது இந்தியக்கடற்படை இடைமறித்தது. படகில் இருந்த இரு விடுதலைப்புலிகள் சயனைட் அருந்தி தற்கொலை செய்துகொள்ள இரும்பொறை மட்டும்பிடிபட்டார். அவரிடமிருந்து இருகடிதங்களும் கைப்பற்றப்பட்டன.

...ஆண்டு ஜூன் 23ஆம் திகதி தனசேகரனை அழைத்தார். சென்னையில் இருந்த சிவராசன், சுபா, நேரு ஆகியோர்களை பெங்களூருக்கு கடத்திச் செல்லும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். அதன்படி தனசேகரன் மேட்டூரிலிருந்து டாங்கர் லொறியை எடுத்துக் கொண்டு சேலம் வந்தார். சேலத்தில் விக்கி, அம்மான் மற்றும் இருவரை ஏற்றிக் கொண்டு சென்னை வந்தார். பூந்தமல்லியில் அவர்களை இறக்கிவிட்டு திரும்பிவரும் வரை காத்திருக்கும்படி கூறினார். பின்னர் சென்னை புறநகர் பகுதியான ஆழ்வார் திருநகருக்கு சென்றார். அங்கிருந்த சிவராசன், சுபா ஆகியோரை டாங்கர்களுக்குள் ஏற்றிக் கொண்டார். பூந்தமல்லியில் காத்திருந்த விக்கி மற்றவர்களையும் ஏற்றிக் கொண்டார்.

லொறி பெங்களூர் சென்றது வழியில் வேலூர் சத்துவாச்...

...பெறாமல் டிராவல் ஏஜெண்ட் போல் பணியாற்றினர். இரும்பொறை, பெரியசாந்தன் மற்றும் பொட்டம்மான் ஆகியோருடன் தொடர்பு கொண்டார். காயமடைந்து வரும் புலிகளுக்கு மருத்துவ சிகிச்சையளிக்க உதவினார்.

இக்கொலை வழக்கில் சி. பி. ஐ. அதிகாரிகள் சிவராசன் குழுவினரை தேடத் துவங்கிய போது, ரங்கன் தனது வீட்டிற்கு அந்த குழுவினரை அழைத்துச் சென்று தலைமறைவாக இருக்க உதவினார். பின் பெங்களூருக்கு அவர்கள் தப்பிச் செல்லவும் உதவினார், பெங்களூருக்கு அவர்கள் தப்பியபோது சிவராசனின் சாரதியாக ரங்கன் இருந்தார்.

பெங்களூர் கோனக் குண்டேவில் சிவராசன் குழுவினர் ஒளிந்திருந்த போது, ரங்கன் வீட்டைவிட்டு வெளியே சென்றிருந்தார். அவர் வீடு திரும்பியபோது வீட்டை பொலிசார் சுற்றிவளைத்ததை பார்த்தார், உடனே மாருதி காரில் சென்னைக்கு திரும்பிவிட்டார்

மாருதி காருக்கு கலரை மாற்றி பெயிண்ட் செய்ய ரங்கன் முயன்றபோது சி. பி. ஐ. மாருதிக் காரை கைப்பற்றி விட்டது. அதன்பின் சில நாட்களில் ரங்கன்கைதானார்.

விக்கி கடத்தல் செய்து வந்தார். 85 ஆம் ஆண்டில் புலிகள் ஆதரவாளராக மாறினார். பின் பெரிய சாந்தனின் உத்தரவுப்படி புலிகளுக்கு மருத்துவ பொருட்களை அனுப்பி வந்தார் ராஜீவ் கொலைக்கு பின் விக்கி, பெரிய சாந்தனுடன் திருச்சியில் இருந்தார். இருவரும் அங்கிருந்து கோவைக்குச் சென்றனர் என கூறினார்.

...புள்ளனர்.

இந்த உடன்படு பாலஸ்தீனியர்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவில்லை, பாலஸ்தீன நாட்டையோ அல்லது பாலஸ்தீன மக்கள் தமது தாயகம் திரும்பும் உரிமையையோ அங்கீகரிக்கவில்லை என்றும் இது பி. எல். ஓவை மட்டுமே அங்கீகரிக்கிறது பி எல் ஓ என்பது வெறும் கட்சி அல்லது இயக்கம் மட்டுமே என்று பதவிவிலகியவர்களில் ஒருவரும் பி எல். ஓவின் பண்பாட்டுப்பிரிவின் தலைவருமான அத்தல்லா கருனி கூறியிருக்கின்றார்.

தற்கால வரலாற்றில் இந்த உடன்பாடுதான் முதன்முறையாகபாலஸ்தீன மக்களின் உரிமையை அங்கீகரித்தது என்று பிஎல் ஓ அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது அமைதிக்கான முயற்சியினமுதற்கட்டம் இது படி உடன்பாட்டை அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இன்று கைச்சாத்திடப்படவிருக்கும் உடன்படிக்கையில் இஸ்ரவேலின் தரப்பில் வெளியுறவு அமைச்சர் சிமோன்பரஸ் அவர்கள் கைச்சாத்திடுவார் என்று கூறப்படுகிறது. இந்த உடன்பாட்டை இஸ்ரவேலின் அமைச்சரவை ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

அதேவேளை பி. எல். ஓ வின் தலைவர் அரபாத் கியூனிஸ் நகரில் இருந்து வாஷிங்டனுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். இவருடன் பி எல். ஓ. வின் மூத்த அதிகாரிகள் சென்றுள்ள போதிலும் பி எல். ஓவின் வெளியுறவு அமைச்சர் கரோகடாமி அரபாத்துடன் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மடு

டுப் பகுதிக்குள் வரவழைப்பதைநோக்கமாகக்கொண்டே சிறிலங்கா அரசு இவ்வாறான நடவடிக்கைகளைமேற்கொண்டது.

இதனைத் தொடர்ந்து மடுவிலுள்ள அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் மடு வதிவிடப் பிரதிநிதி கிறிஸ்ரீனா ரிலீயூ, அங்குள்ள அகதிகளிடம் வவுனியாவில் மீளக் குடியேறுபவர்களுக்கே நிவாரணம் வழங்கப்படும் என்றும் திரும்புவோர் கையொப்பமிட்டுத் தாருங்கள் என்றும் தெரிவித்தார்.

எனினும் வவுனியா மற்றும் திருமலையில் தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய அகதிகள் விடயத்தில் சிறிலங்கா அரசு நடந்து கொள்ளும் விதம் பற்றிய செய்திகளை அறிந்த இம்மக்கள் இராணுவ கொலைக்களத்தினுள் தம்மை வரவழைக்க சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையைப் புரிந்து கொண்டு தமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்கு எதிராக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். ஆர்ப்பாட்டம் நடத்திய மக்களிடம், இந்த விடயமாகக் கொழும்பிலுள்ள தமது காரியாலயத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் இது குறித்துவிரைவில் தீர்வுகாணப் படும் என்றும் அகதிகளுக்கான ஐ நா. உயர் ஸ்தானிகராலய அலுவலகத்தினர் தெரிவித்ததைத் தொடர்ந்து மக்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர்.


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 12-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10900

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 42-0488, | 42-0970, | 26-3017, | 26-7546, | 42-1623 |
| 24-6280, | 26-0594, | 24-0951, | 43-3854, | 43-4580 |
| 40-6979, | 24-0422, | 26-6264, | 26-5604, | 24-5461 |

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 26-4429, | 26-0502, | 27-9489, | 26-6077, | 26-0786 |
| 28 7540, | 28-0732, | 26-8839, | 26-6320, | 24-4323 |
| 41-8557, | 24-6211, | 24-4992, | 27-0994, | 43 1069 |
| 25-5725, | 27-8185, | 26-3812, | 28-8421, | 26-5157 |
| 24-7327, | 27-7717, | 26-3937, | 24-4875, | 28-2511 |

## பூப்புனித நந்நீராட்டு அழைப்பிதழ்



டயீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஆவணி 30ஆம் திகதி (15 09-93) புதன்கிழமை காலை 9மணி முதல்10 மணிவரைவரும்மகர நட்சத்திரமும் சிங்கலக்கினமும்கூடியசுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி

திருநிறை செல்வி **பவானி** அவர்களுக்கு

எமது இல்லத்தில் பூப்புனிதநந்நீராட்டு செய்ய பெரியோர் நிச்சயித்திருப்பதால்அத்தருணம்உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து செல்வியை வாழ்த்தியேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பில்லை)



தங்கள் நல்வரவை நாடும்

வ. கோபாலபிள்ளை தம்பதிகள்

அறத்திச் சந்தி,
புலோப்பளை, பளை.

விளாசினி கபே,
கண்டி வீதி,
பளை.

(6007)

## தமிழீழ காவல்துறையினருக்கு எமது பாராட்டு

எமது வீடியோ ஸ்தாபனத்தில் 23-09-92 இல் கடை உடைத்து களவாடப்பட்ட ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை மீட்டெடுத்துத் தந்த குற்ற புலனாய்வு பிரிவைச்சேர்ந்த காவல்துறையினருக்கு எமது நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**அம்பாள்**
**வீடியோ ஓடியோ சென்ரர்**
894, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
பொ. பாலசுப்பிரமணியம்

(6008)

...404, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Commercial Bank அருகில்)

முழுநேர வகுப்புக்கள் சிறந்த நூலக வசதியுடன் ஆரம்பமாக இருக்கின்றன. பின்வரும் வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. B A. Part - I — யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. B A. Part - II — ,, ,,
3. G A Q — ,, ,,
4. G. S. Q. — பேராதனைப் பல்கலைக்கழகம்

பாடங்கள்: G A. Q. B A. வகுப்புகள்
தமிழ், கிறிஸ்தவம், இந்துநாகரிகம், அரசியல் விஞ்ஞானம், ஆங்கில இலக்கியம், மெய்யியல்.

G. S. Q பாடங்கள்: கணிதம், புள்ளிவிவரவியல்

விண்ணப்பப் படிவங்களை மேற்படி விலாசத்திற்கு 15 09. 1993 தொடக்கம் கிழமை நாட்களில் காலை 9 00 மணி முதல் மாலை 4 00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 25 09 93

(சி-7411) பதிவாளர்

வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தினர் நடாத்தும்

## 'கலை நிகழ்ச்சி'

காலம்: 1993. 09. 13 இன்று மாலை 7. 30 மணி

இடம்: யா/கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானம்

எமது மண்ணின் மாணவர்களின் கல்வியை வளம் படுத்த தோள கொடுக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பளிப்பு- 10/ , 15/-

(சி/7412)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் இராசையா

(முன்னாள் அரசினர் வைத்தியசாலை கங்காணி)

கோக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் இராசையா காலமாகி விட்டார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சுகுமார் (நல்லூர் ப. நோ. கூ. சங்கம்), நந்தகுமார் (கனடா), கமலலோசனி, சர்வலோசனி, மீனலோசனி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்- இவரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை 3. 00 மணிக்கு கொக்குவில் கிழக்கு மயானத்தில் இடம் பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. சண்முகலிங்கம் (சைக்கிள் கடை

(7413)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது